சுவாமிமலை

சுவாமி மலை

எண்	பாடல்	எண்	பாடல்
93	அவா மரு	104	சரண கமலால
94	ஆதை பிருதிவி	105	சுத்திய நரப்
95	இருவினை புனைந்து	106	செகமாயை
96	எந்தத் திகை	107	தெருவினில்
97	ஒருவரையும்	108	நாசர் தங்
98	கடாவினிடை	109	நாவேறு பா
99	கடிமா மலர்	110	நிறைமதி
100	கதிரவனெ	111	பாதிமதி
101	கறை படும்	112	மகர கேதன
102	காமியத்து	502	முறுகு காள
103	குமர குருபர	113	ஒருருவாகிய

பக்கம்

பஞ்சாட்சரம் -- - - - - 13

ஆறு ஆதார சக்கரங்கள் - - - 49,50

(93) ஜோன்புரி (18) (4) (½+1 + ½+1 + 1½+1 + 1½+1) 5+3

அவா மருவு இனா வசுதை காணும் மடவார் எனும்
அவார், கனலில் வாழ்வு என்று உணராதே
அவா முறையின் வாதை உறு தேரை கதி நாடும்
அறிவு ஆகி உளம் மால் கொண்டு அதனாலே

சிவாய எனு நாமம் ஒரு காலும் நினையாத
திமிர ஆகரனே வா என்று அருள்வாயே

திரோத மலம் மாறும் அடியார்கள் அருமாதவர்
தியானம் உறு பாதம் தருவாயே;

உவா இனிய கானில் உலவா மயில் வாகனம்
உலாசமுடன் ஏறும் கழலோனே.

உலா உதய பானு சதகோடி உருவான
ஒளி வாகும் அயில் வேல் அம் கையினோனே

துவாதச புயா(அ)சல ஷட் ஆனன, வரா, சிவ
சுதா, எயினர் மான் அன்பு உடையோனே

சுராதிபதி மால் அயனும் மாலொடு சலாமிடு
சுவாமிமலை வாழும் பெருமாளே

---

(93) ஆசையும். அதனால் வரும் (இன்னா) துன்பமும், (வசுதை - பூமி) மண்ணாசையும், விரும்பிப் பார்க்கின்ற பெண்கள் என்கின்ற பெண்ணாசையும், நெருப்பில் வாழ்வதை ஒக்கும் என்று உணராமல் பாம்பால் உண்ணப்படுகின்ற, அந்த வேதனையைக் கொண்ட தேரையின் கதியை அடைகின்ற அறிவைக் கொண்டவனாகி, உள்ளத்தில் ஆசை கொண்ட அக்காரணத்தினாலே

'சிவாய' என்கின்ற திருநாமத்தை ஒரு போதும் நினையாத, (திமிர ஆகரனை) இருளுக்கு இடமானவனை - அஞ்ஞானம் பூண்டவனை - என்னிடம் வா என்று அழைத்து அருள் புரிவாயாக.

(உன்னை) மறத்தல் என்ற குற்றத்தை நீக்குகின்ற அடியார்களும் அருமை வாய்ந்த மகா தவசிகளும், தியானம் செய்கின்ற திருவடியைத் தந்தருளுக.

(உவா - யானை) பிணிமுகம் எனப்படும் யானையையும், இனிய காட்டில் உலவும் மயிலையும் வாகனமாகக் கொண்டு உல்லாசத்துடன் அவை மீது ஏறும் திருவடியை உடையவனே.

உலவி வரும் உதய சூரியர்கள் நூறு கோடி ஒருவருடைய உரு சேர்ந்தது போல ஒளி வீசும் (வாகு) அழகையும் கூர்மையையும் கொண்ட வேலை அழகிய கரத்தில் உடையவனே.

பன்னிரண்டு புய மலைகளையும், ஆறு திருமுகங்களையும் கொண்ட (வரா) சிறந்தவனே! சிவகுமாரனே! வேடர்குலத்தில் வளர்ந்த மான் போன்ற பார்வையுடைய வள்ளிபிராட்டியின் அன்பை உடையவனே

தேவர்களின் அதிபதியாகிய இந்திரனும், திருமாலும், பிரமனும் அன்போடு வணங்குகின்ற சுவாமிமலையில் வாழும் பெருமானே.

(94) நாட்ட குறிஞ்சி (8½) (८) $(1+\frac{1}{2}+1\frac{1}{2}+1+1\frac{1}{2}+2)$

ஆதை பிருதிவிப் பாச நிகளமும்,
மாமாய கிருமும் அற்று, ஏகிபவம் என,
ஆகாச பரம சிற் சோதி பரையை அடைந்து, உளாமே
ஆறாறின் அதிகம், அகாய, அதுதினம்
யோகீசர் எவரும் எட்டாத பர துரியா
(அ)தீத அகளம் எப்போதும் உதயம் அநந்த மோகம்

வாதி சகல விஸ்தார விபவரம்
யோகாதி முடிவும், மெய்ப் போத, மலர் அயன்
மால் ஈசர் எனும் அவர்க்கு ஹேது விபுலம் அசங்கையால் நீள்

மாளாத தன் நிசம் உற்றய(து) அரிய
நிராதாரம் உலைவு இல் சற் சோதி நிருபமும்
மாறாத சுக வெ(ள்)ளத் தாணுவுடன் இனிது என்று சேர்வேன்

நானாவித கருவிச் சேனை வகை வகை
சூழ்போது பிரபலச் சூரர் தொடு, நெடு
நாவாய் செல் கடல் அடைத்து ஏறி நிலைமை இலங்கை சாய

(94) நீங்குதற்கரிய மண்ணாசை என்ற விலங்கும், பெரிய மயக்கத்தை செய்யும் அஞ்ஞான இருளும் ஒழிந்து, (ஏகிபவம் என) ஒன்று பட்ட தன்மையென்று கூறும்படி, ஆகாயம் போலப் பரந்த பெரிய, ஞான சோதியான பராசக்தியை அடைந்து (உளாமே) நினைப்பை விட்டு

முப்பத்தாறு தத்துவங்களுக்கும் மேற்பட்டதாய், முதன்மையான தாய், என்றும் யோகீசர் எவரும் எட்டாததான, மேலான துரிய நிலைக்கு (யோகியர் தன்மயமாய் நிற்கும் உயர்நிலை) மேற்பட்ட நிலையினதாய், (அகள) உருவமில்லாததாய் -நிர்களமாய்- எப்போதும் தோன்றி நிற்பதாய், அளவற்ற வசீகரம் வாய்ந்ததாய்

வான் முதலான சகல விரிவுள்ள வாழ்வுப் பொருளதாய், யோகத்தின் ஆதியாயும் முடிவாயும் நிற்பதாய், உண்மை அறிவாய், தாமரை மலரில் வாழும் பிரமன், திருமால், உருத்திரன் என்ற மும்மூர்த்திகட்கும் மூல காரணமாய் நிற்கும் பெருமை கொண்டதாய், ஐயம்-அச்சம் இல்லாது நீடித்து

இறத்தலின்றி தானே மெய்யாந் தன்மை உற்றதாய், அரியதாய் சார்பு ஒன்றும் இல்லாததாய், (உலைவு இல்) அழிவில்லாத உண்மை சோதியாய், ரூபம் அற்றதாய், மாறுதல் இல்லாததான; இன்ப வெள்ளமான சிவத்துடன் இனிமையாக என்று சேர்வேன்.

பல விதமான ஆயுதங்களைக் கொண்ட சேனை, விதம் விதமாகச் சூழ்ந்து வர, கீர்த்தி பெற்ற வீரர்களுடன் பெரிய கப்பல்கள் செல்கின்ற கடலை அணையிட்டு அடைத்துக் கரையேறி. இலங்கையின் உயர்ந்த நிலைமை தொலையும்படி

நாவாறு மணி முடிப் பாவி தனை அடு
சீராமன் மருக, மைக் காவில் பரிமள
நா வீசு வயலி அக்கீசர் குமர — கடம்ப வேலா

காணும் எயினர் தம் சாதி வளர் குற
மானை மகிழ் கருத்தாகி மருள் தரு
காதாரும் உனது கட் பாணம் எனதுடை — நெஞ்சு பாய்தல்

காணாது, மமதை விட்டு ஆவி உய அருள்
பாராய் என உரை வெகு ப்ரீதி இளையவ
காவேரி வடகரைச் சாமிமலை உறை — தம்பிரானே

பத்து மணி முடிகளையுடைய பாவியாம் இராவணனை வதைத்த ஸ்ரீ ராமபிரானது மருகனே! இருண்ட சோலையின் நறுமணம் (நா) அயலில் வீசுகின்ற, வயலூரில் எழுந்தருளியுள்ள அக்னீசுரர் என்னும் திருநாமத்தையுடைய சிவபிரானது குமரனே! கடப்ப மலரையணிந்தவனே! வேலனே.

காட்டை ஆளும் வேடர் குலத்தில் வளர்ந்த குறமான் (வள்ளியுடன்) மகிழ்ச்சி பூண்ட கருத்தை உடையவனாகி, "மோக மயக்கத்தைத் தந்து, காது வரை நீண்டிருப்பதுமாகிய உன்னுடைய கண்ணாகிய பாணமானது என்னுடைய நெஞ்சுக்குள் பாய்வதை-(நீ)

காணாமலிருக்கின்றாய்; அந்தச் செருக்கை விட்டு என்னுடைய ஆவி உய்ய அருள் பாலிப்பாயாக" என்று (வள்ளியிடம்) உரைத்த. மிக்க அன்பு கொண்ட இளையவனே! காவேரியாற்றின் வடகரையில் உள்ள சுவாமிமலையில் உறைகின்ற தம்பிரானே

---

(95) அடாணா (5½) (ம) 2+2+1½

இருவினை புனைந்து, ஞான விழிமுனை திறந்து, நோயின்
இருவினை இடைந்து போக — மலம் மூட

இருள் அற விளங்கி, ஆறுமுகமொடு கலந்து, பேதம்
இலையென இரண்டு பேரும் — அழகான

(95) பெரிய செயலாகிய சிவயோகத்தை மேற்கொண்டு, ஞானக் கண் முனை (லலாட நந்திச் சுழி) யைத் திறந்து, பிறவிப் பிணிக்குக் காரணமாயுள்ள நல்வினை தீவினையென்ற இருவினைகளும் பின் வாங்கி ஓடிப் போக, (ஆணவ) மலம் மூடுகின்ற அந்த அஞ்ஞான இருள் அற்று விலக, (நான்) விளக்கமுற்று, (உனது) ஆறுமுகங்களோடு கலந்து, (உன்னோடு) வேற்றுமை இல்லை என்று சொல்லும்படி நீயும் நானும் (இருவரும்) அழகான (பரமாத்மாவாகிய தேவரீரும் ஜீவாத்மாவாகிய அடியேனும் இரண்டெனும் தன்மை நீங்கிக் கலந்து அத்துவதமாகி)

பரிமள சுகந்த வித மயம் என மகிழ்ந்து, தேவர்
பணிய விண் மடந்தை பாத மலர் தூவ

பரிவு கொடு அநந்த கோடி முநிவர்கள் புகழ்ந்து பாட
பரு மயிலுடன் குலாவி வரவேணும்

அரி அயன் அறிந்திடாத அடியிணை சிவந்த பாதம்
அடியெண விளங்கி. ஆடும் நடராசன்

அழல் உறும் இரும்பின் மேனி மகிழ் மரகதம் பெண் ஆகம்
அயல் அணி சிவன் புராரி அருள் சேயே

மருவலர்கள் திண் பறை முடி உடல் நடுங்க ஆவி
மறலி உண, வென்ற வேலை உடையோனே

வளை குலம் அலங்கு காவிரியின் வட புறம் சுவாமி
மலை மிசை விளங்குக் தேவர் பெருமானே.

நல்ல வாசனையுடைய மலரும் அதன் மணமும் போல் ஒன்றி மகிழ்வுற்று, தேவர்கள் பணியவும், தேவலோக மங்கையர் திருவடிகளில் மலர் தூவவும்

மிக்க அன்பு கொண்டு எண்ணிலாத கோடிக் கணக்கான முநிவர்கள், புகழ்ந்து பாடவும், பெரிய மயில் மிசை ஏறி உல்லாசமாக வர வேணும்.

திருமாலும், பிரமனும் அறிந்துணராத இரண்டு திருவடிகளாம் சிவந்த பாதங்களை அளவாக வைத்து விளங்க ஆடுகின்ற (பஞ்ச கிருத்தியங்களுக்கு எல்லாம் ஆதிகாரணமாக விளங்கி ஆடுகின்ற) நடராஜப் பெருமான்,

நெருப்பிலிட்ட இரும்பு போல ஒளி விடும் திருமேனியையும், மகிழ்ச்சி கொண்ட பச்சை நிறப் பெண்ணும் பார்வதியைத் தமது தேகத்திற் பாகமாக பக்கத்தில் வைத்துள்ள திருக்கோலத்தையும் உடைய சிவன், திருபுரங்களின் பகைவனும். ஈசன் அருளிய குழந்தையே.

பகைவர்களாம் அசுரர்களுடைய வலிய (பண் ஆர) அலங்கரித்த முத்துக்கள் விளங்கும், கிரீட முடிகளும் உடல்களும் நடுங்க அவர்களது உயிரை யமன் உண்ணும்படி வென்ற வேலை உடையவனே.

சங்கின் கூட்டங்கள் அசைந்து செல்லும் (அல்லது)-அலங்கு- ஒளி வீசுகின்ற — காவிரி ஆற்றின் வட புறத்தில் விளங்கும் சுவாமிமலை மீது விளங்கும் தேவர்கள் பெருமானே.

(96) மலய மாருதம் (8) ரூ ஆதி.

எந்தத் திசையினும் மலையினும் உவரியின்
எந்தப் படியினும் முகடினும் உள பல
எந்தச் சடலமும் உயிர் இயை பிறவியின் உழலாதே
இந்தச் சடமுடன் உயிர் நிலை பெற, நளி
னம் பொற் கழல் இணைகளில் மரு மலர் கொடு
என் சித்தமும் மனம் உருகி நல் சுருதியின் முறையோடே
சந்தித்து அரஹர சிவசிவ சரண் என
கும்பிட்(டு) இணை அடி அவை, என தலைமிசை
தங்கப், புளகிதம் எழ இரு விழி புனல் குதி பாயச்

சம்பைக் கொடி இடை விபுதையின் அழகு முன்
நுந்தத் திருநடம் இடு சரண் அழகுற
சந்தச் சபை தனில் எனது) உளம் உருகவும் வருவாயே (மு)

தொந்தத் திகுகுட தகுகுட டிமிடிமி
தந்தத் தனதன டுடுடுடு டமடம
துங்கத் திசைமலை உவரியும் மறுக சலரி பேரி
தன்றச் சிலைமணி கலகல கலின் என
சிந்தச் சுரர் மலர், அயன் மறை புகழ் தர
துன்புற்(று) அவுணர்கள் நமன் உலகு உறவிடும் அயில்வேலா

(96) திசைகள் எல்லாவற்றிலும், மலைகளிலும், கடலிலும், எல்லா உலகங்களிலும், வான உச்சியிலுள்ள அண்டங்களிலும் (உள) வசிக்கின்ற, பல வகையான எந்த உடலில் வாழும் உயிர் சேர் பிறப்புகளிலும் (நான்) உழன்று திரியாமல்

இந்த உடம்புடனேயே, என் உயிரானது (ஆன்மாவானது) – உன்னுடன் அத்துவிதமாகக் கலந்து) நிலைபேறடைய, உனது தாமரையன்ன அழகிய திருவடிகளில் மணமுள்ள மலர் கொண்டு, என் சித்தமும் மனமும் உருகி, வேதங்களில் சொல்லப்பட்ட வழியே (உன்னைச்) சந்தித்தும், 'ஹர ஹர சிவ சிவ சரணம்' என்று துதித்து வழிபட, (நீ) உன் இணை அடிகள் என் தலைமிசை பொருந்த, என் உடல் புளகிதம் கொள்ள, (என்) இரு கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் அருவிநீர் போலக் குதித்துப் பாய, (முருகா. நீ)

சம்பைக் கொடி போன்ற மெல்லிய இடையை உடைய (சம்பை-மின்னல்) (விபுதை-தேவதை) தேவசேனையின் அழகு முன்னே விளங்க, (நுந்த- விளங்க), திருநடம் இடும் உனது திருவடி அழகுடன் பொலிய இந்த அழகிய சபையில் எனது உள்ளம் உருகவும் வந்தருள்வாயே

தொந்தத் திகுகுட தகுகுட டிமி டிமி தந்தத் தன தன டுடுடுடு டம டம என்று உயர்ந்த திசைகளும் மலைகளும், கடல்களும் கலங்கும்படி, சல்லரி பேரி என்னும் வாத்தியங்கள்

நெருங்கி ஒலிக்க, விற்களிற் கட்டியுள்ள மணிகள் கலகல கலின் என சப்திக்க, தேவர்கள் பூ மலர் சிந்த, பிரமனும் வேதங்களும் புகழ்ந்து துதி செய்ய, துன்பத்தை அடைந்து அசுரர்கள் யமன் உலகை அடைய, செலுத்திய கூரிய வேலாயுதனே!

கந்தச் சடைமுடி, கனல் வடி(வு) அடல் அணி
எந்தைக்(கு) உயிர் எனும் மலைமகள் மரகத
கந்தப் பரிமள தனகிரி உமை அருள் இளையோனே

கஞ்சப் பதம் இவர் திருமகள் குலமகள்
அம்பொற் கொடி இடை புணர் அரி மருக, நவ
கந்தப் பொழில் திகழ் குருமலை மருவிய பெருமானே(6)

மணம் பொருந்திய சடைமுடியையும், நெருப்புப் போன்ற திருவுருவத்தையும், வேராற்றலும் பேரழகும் உடைய, என் தந்தை யாம் சிவபிரானுக்கு உயிர் போன்ற, மலைமகள், பச்சை நிறத்தி மிகுந்த வாசனை தங்கிய கொங்கை மலைகளை உடையவள் ஆகிய உமாதேவி அருளிய இளையவனே!

தாமரை என்னும் பீடத்தில் ஏறி அமர்ந்துள்ள திருமகள், குலமகள் அழகிய பொற்கொடி போன்ற இடையை உடையவளாம் இலக்குமி தேவி மணந்துள்ள திருமாலின் மருகனே! நல்ல மணம் வீசும் சோலைகள் விளங்கும் குருமலை எனப்படும் சுவாமிமலையில் வீற்றிருக்கும் பெருமானே!

(97) <u>சக்ரவாளம்</u> (8½) (1+½+1+½+½+2)

ஒருவரையும் ஒருவர் அறியாமலும் திரிந்து
இருவினையின் இடர் கலியொடு ஆடி நொந்து நொந்து
உலையில் இடு மெழுகதென வாடி முன் செய் வஞ்சனையாலே

ஒளி பெறவே எழுப மர பாவை துன்றிடும்
கயிறு விதம் என மருவி ஆடி, விண் பிறந்து,
ஒளிரு மினல் உருவதென ஓடி அங்கம் வெந் திடுவேனை

கருதி, ஒரு பரம பொருள் ஈது என்று, என்
செவி இணையின் அருளி உருவாகி வந்த என்
கருவினையொடு அருமலமும் நீறு கண்டு தண் தரு மா மென்

(97) (மாயையால் மூடப்பட்டு முற்பிறப்பின் உணர்ச்சியின்மையால்) ஒருவரை யொருவர் அறிந்து கொள்ள முடியாமல் அலைந்து திரிந்தும் நல்வினை தீவினைகளின் காரணமாய் கலக்கமும் துன்பமும் அடைந்து மனம் மிக வேதனைப்பட்டு, நெருப்பிலிட்ட மெழுகு போல் வாடி, முற்பிறப்பிற் செய்த வஞ்சனைகளின் பயனாக,

பிரதாபத்துடன் விளங்கி எழுந்து, (பொம்மலாட்டத்தில்) மரப் பாவையைக் கட்டியுள்ள கயிறு போலப் பொருந்தி (ஆட்டங்களை) ஆடி, வானத்தில் வெளிப்பட்டு ஒளி வீசும் மின்னலின் உருவு போல ஓடி (ஒரு நொடியில் வாழ்நாள் கடந்து போக) (முடிவில்) உடல் வெந்து போய் மறைகின்ற என்னையும்

அடியார் கூட்டத்துள் ஒருவனாக எண்ணி, ஒப்பற்ற பரம்பொருள் இது என்று என் இரு செவியிலும் உபதேசித்து, இம் மனித உரு எடுத்து வந்த என் பிறப்பு பிறப்பு வினையையும், அரிய மும்மலங்களையும் பொடியாகும்படி செய்து, குளிர்ச்சியைத் தருவதும், சிறந்ததும், மேன்மை வாய்ந்ததுமான

கருணை பொழி கமல முகம் ஆறும், இந்துளம்
தொடை, மகுட முடியும் ஒளிர் நூபுரம் சரண்
கலகலென, மயிலின் மிசை ஏறி வந்து உகந்து என்னை ஆண்டவாய்

திரிபுரமும் மதன் உடலும் நீறு கண்டவன்
தருண மழ விடையன், நடராஜன், எங்கணும்
திகழ், அருணகிரி சொருபன், ஆதி அந்தம் அங்கு அறியாத

சிவயநம நமசிவய காரணன், சுரந்து
அமுதமனை அருளி எனை ஆளும் எந்தைதன்
திரு உருவின் மகிழ் எனது தாய் பயந்திடும் புதல்வோனே

குருகு கொடியுடன் மயிலில் ஏறி மந்தரம்
புவனகிரி சுழல மறை ஆயிரங்களும்
குமர குரு வென வலிய சேடன் அஞ்ச வந் திடுவோனே

குறமகளின் இடை துவள பாத செஞ்சிலம்பு
ஒலிய ஒரு சசிமகளொடே கலந்து திண்
குருமலையின் மருவு குருநாத உம்பர் தம் பெருமாளே

நமசிவாய : ஸ்தூல பஞ்சாட்சரம்   சிவாய : முத்தி பஞ்சாட்சரம்
சிவாயநம : சூட்சும பஞ்சாட்சரம்
சிவாயசிவ : காரண பஞ்சாட்சரம்

கருணையைப் பொழிகின்ற தாமரையன்ன உன் முகங்கள் ஆறும், கடப்ப மாலையும், கிரீடம் அணிந்துள்ள திருமுடிகளும் தோன்றவும், ஒளி வீசும் பாதத்தில் அணிந்துள்ள நூபுரங்கள் கலகல என்று ஒலிக்கவும், மயில் மீது எழுந்தருளி வந்து மகிழ்ச்சியுடன் என்னை ஆண்டருள்வாயாக

திரிபுரங்களையும் மதன் உடலையும் எரித்துச் சாம்பற்பொடி ஆக்கியவரும், மிக இளமை வாய்ந்த இடபத்தை வாகனமாக உடையவரும் நடனராஜரும், எவ்விடத்தும் விளங்கும் சிவந்த மலை (நெருப்பு மலையின்) சொரூபம் கொண்டவரும், தோற்றமும், முடிவும், அந்த அருணகிரியில் திருமாலும் பிரமனும் அறிய முடியாத

சிவாய நம - நமசிவாய என்னும் ஐந்தெழுத்தின் மூல காரணப் பொருளானவரும், கருணை சுரந்து, ஞான அமுதத்தை தந்தருளி என்னை ஆண்டவருமான எந்தை சிவபிரானது திரு உருவத்தில் (இடது பாகத்தில்) இருந்து மகிழும் என் தாய் (உமை) அருளிய புதல்வனே

கோழிக் கொடியுடன் மயில் மீது ஏறி மந்தரமலை முதலாகப் பூமியில் உள்ள (எல்லா) மலைகளும் சுழலவும், மறை ஆயிரக் கணக்கானவைகளும் (எண்ணிலா வேதங்களும்) "குமர குருவே" என்று ஒலிக்கவும், வலிய ஆதிசேடன் அஞ்சவும் வருபவனே!

குறமகளாகிய வள்ளி நாயகியின் இடை துவளவும், அவள் பாதத்தில் அணிந்துள்ள செம்மை வாய்ந்த சிலம்பு ஒலிக்கவும் ஒப்பற்ற இந்திராணியின் மகளாம் தேவசேனையுடனும் கலந்து (தரிசித்தவர்களுடைய பாவத்தை விலக்கும்) திறனுடைய சுவாமிமலையில் எழுந்தருளியுள்ள குருநாதனே! தேவர் தம் பெருமாளே.

(98) மோகனம் (5) ௳ 0/3

கடாவின் இடை, வீரம் கெடாமல் இனிது ஏறும்
கடாவின் நிகர் ஆகும் சமனும்
கடாவி விடு தூதன் கெடாத வழி போலும்
கனவில் விளையாடும் கதை போலும்
இடாது பல தேடும் கிராதர் பொருள் போல் இங்கு
இராமல் உயிர் கோலிங்கு இதம் ஆகும்

இது ஆம் என். இரு போதும் சதா இன்மொழியால், இன்று
யானும் உனை ஓதும் படி பாராய் ;

விடாது நடம் நாளும் பிடாரி உடன் ஆடும்
வியாகரண ஈசன் பெருவாழ்வே
விகாரம் உறு சூரன் பகாரம் உயிர் வாழ்வும்
விநாசம் உற வேல் அங்கு எறிவோனே
தொடாது நெடு தூரம் தடாது மிக ஓடும்
சுவாசம் அது தான் ஐம்புலனோடும்
சுபானம் உறு ஞான தபோதனர்கள் சேரும்
சுவாமிமலை வாழும் பெருமானே

(98) எருமைக் கடாவின் மீது தனது வீரம் குன்றாமல் இனிதாக ஏறும், கடாவைப் போன்ற முரட்டுத்தனமுடையவனுமாகிய யமனார்,

தூண்டி அனுப்பிய தூதன், தவறாத வழியில் வருவது போல வந்து, கனவில் விளையாடுகின்ற கதை போலவும்

ஒருவருக்கு ஈயாது பலப்பல தேடிச் சேகரிக்கும் கொடியோர் தம் பொருள் போலவும், இங்கு நிலைத்து இருக்க முடியாத வண்ணம் உயிரைக் கவர்ந்து போகின்ற சுகந்தான்

இந்த வாழ்க்கை என்று உணர்ந்து, காலை மாலை இரு போதும், எப்போதும் இனிய மொழிகளால், இன்று யானும் உன்னை ஓதும்படி திருக்கண்ணால் பார்த்தருளுவாயாக.

எந்நாளும் விட்டுக் கொடுக்காது நடனத்தை காளியுடன் ஆடுகின்ற (நாடக) இலக்கணம் அறிந்த சிவபெருமானுடைய சிறந்த புதல்வரே

துர்க்குணம் கொண்ட சூரனுடைய, (பகாரம் - அலங்காரம்) அலங்கார உயிரும் வாழ்வும் அழியும்படி வேலை அன்று செலுத்தியவனே/.

தொட முடியாமல் நீண்ட தூரம் தடைபடாமல் அதிகமாக ஓடுகின்ற மூச்சையும் ஐம்புலன்களையும்

நல்லபடி உள்ளே அடக்குகின்ற ஞான தவசீலர்கள் சேர்கின்ற சுவாமிமலையில் வாழும் பெருமானே.

(99) கமாஸ் $(5\frac{1}{2})$ (ரூ) $(1+\frac{1}{2}+\frac{1}{2}+1\frac{1}{2})$

கடி மா மலர்க்குள் இன்பம் உள, வேரி) கக்கு, நண்பு
தரு மா கடப்(பு) அமைந்த தொடை மாலை

கன மேரு ஒத்திடும் பன்னிரு மா புயத்து அணிந்த
கருணைகர, ப்ரசண்ட கதிர் வேலா

வடிவு ஆர் குறத்தி தன், பொன் அடி மீது நித்தமும் தண்
முடியானது உற்று (உ)கந்து பணிவோனே

வள வாய்மை சொற் ப்ரபந்தம் உள கீரனுக்கு (உ)கந்து
மலர் வாய் இலக்கணங்கள் இயல்பு ஓதி

அடி மோனை சொற்கு இணங்க உலகாம் உவப்ப என்று
(உ)ன் அருளால் அளிக்கு கந்த பெரியோனே
<u>அடியேன்</u> உரைத்த புன் சொல் அது மீது நித்தமும் தண்
<u>அருளே தழைத்(து) உகந்து</u> <u>வரவேணும்</u>
செடி நேர் (உடல்) குடம்பை தனின் மேவி உற்றிடு இந்த
படிதான் அலக்கண் இங்கண் உறலாமோ

திற மாதவர் கனிந்து (உ)ன் இரு பாத பத்மம் உய்ந்த
<u>திருவேரகத்து</u> அமர்ந்த <u>பெருமானே</u>.

(99) (கடி) வாசனை தங்கிய, (மா) பெருமை பொருந்திய, புஷ்பங்களுக்குள் இன்பத்தைத் தருவதும், (வேரி கக்கு) தேன் துளிப்பதும், அன்பைப் பெருக்குகின்றதுமான சிறந்த கடப்ப மலர்களாகக் கொண்டு புனைந்த தொடுக்கப் பெற்ற பூ மாலைகளை

பொன் மேரு மலையை யொத்து விளங்கும் சிறந்த பன்னிரு புயங்களிலும் அணிந்துள்ள கருணைகரனே! மிகுந்த வேகமும் ஒளியும் கொண்ட வேற்படையை உடையவனே!

அழகு நிறைந்த வள்ளிபிராட்டியின், அழகிய அடியிணை, தினந்தோறும், குளிர்ந்த (உனது) முடியானது பொருந்தும்படி மகிழ்ந்து பணிபவனே!

வளப்பமும் மெய்ம்மையும் வாய்ந்த சொற்கள் அமைந்த நூல்களைப் பாட வல்ல நக்கீரதேவருக்கு. உனது மலர் வாயால் இலக்கண நயங்களை ஓதி,

அடி மோனை சொல்லுக்குப் பொருந்த 'உலகம் உவப்ப' என்று உனது அருள்வாக்கால் எடுத்து மகிழ்ந்து கூறிய பெரியவனே!

அடியேன் சொல்லுகின்ற இந்த இழிந்த சொற்கள் மீதும், தினமும் குளிர்ந்த உனது திருவருளை பாலித்து மகிழ்ந்து வரவேணும்

பாவச் செயல்களே நிறைந்த இந்த உடல் என்னும் கூட்டில் பொருந்தியிருக்கின்ற இந்த வகையிலேயே துன்பங்களை இங்கே நான் அநுபவித்தல் ஆமோ (ஆகாது என்றபடி)

திறம் வாய்ந்த மகா தவசிகள் உள்ளம் கனிந்து உனது இரண்டு பாத தாமரைகளால் ஈடேறப் பெற்ற (உய்வு பெற்ற) திருவேரகம் என்னும் தலத்தில் வீற்றிருந்து அருளும் பெருமானே!

(100) பூந்து வராளி (5½) (ட) 4+½

கதிரவன் எழுந்து (உ) லாவு திசை அளவு கண்டு, மோது
கடல் அளவு கண்டு, மாய மருளாலே
கணபண புயங்க ராஜன் முடி அளவு கண்டு, தாள்கள்
அவின் அற நடந்து தேயும் வகையே போய்

இதம் இதம் இதென்று நாளும் அருகு அருகு இருந்து கூடும்
இடம் இடம் இது என்று சோர்வு படையாதே

இசையொடு புகழ்ந்த போது நடுவிய ப்ரசண்டர் வாசல்
இரவு பகல் சென்று வாடி உழல்வேனோ

மதுகரம் மிடைந்து வேரி தரு நறவம் உண்டு, பூக
மலர் வள நிறைந்த பாளை மலர் ஊடே
வகை வகை எழுந்த சாம அதி மறை வியந்து பாட
மதி நிழல் இடும் சுவாமி மலை வாழ்வே

அதிர வரு சண்ட வாயு என வரு கருங் கலாப
அணி மயில் விரும்பி ஏறும் இளையோனே
அடைவொடு உலகங்கள் யாவும் உதவி, நிலை கண்ட பாவை
அருள் புதல்வ அண்ட ராஜர் பெருமானே.

(100) சூரியன் உதித்துச் செல்லும் திசைகளின் அளவைச் சென்று
கண்டும், அலைகள் மோதும் கடலின் அளவைப் போய்க் கண்டும்
உலக மாயை என்னும் மயக்கத்தால்
(கண) கூட்டமான படங்களையுடைய நாகராஜனாகிய ஆதிசேடன்
முடி எல்லை அளவைப் போய் (பாதாளம் வரையும் போய்க்) கண்டும்
(இவ்வாறெல்லாம் அலைந்து) என் அழகு குலைய நடந்து கால்கள்
தேயுமாறு அங்கங்கே போய்
இது நல்ல இடம், இது நல்ல இடம் என்று நினைத்து நாளும், (லோபிக
ளுடைய) சமீபத்திற் சமீபத்தில் அணுகி இருந்து, (சேர்ந்து அணுகத்
தக்க இடம் இதுதான் இதுதான் என்று எண்ணி) தளர்ச்சி அடையாமல்
இசைப் பாட்டுக்களாலும் உரையாலும் அவர்களைப் புகழ்ந்து நின்ற
போது, (மெல்ல) நடுவும் பெரிய ஆட்களாம் அந்த லோபியர்
களின் வீட்டு வாசலில், இரவும் பகலும் சென்று நான் வாடி திரியலாமா!
வண்டுகள் நிறைந்து கூடி, வாசனையுள்ள தேனை உண்டு, கமுக
மரத்தில் பூவின் வளப்பம் உள்ள பாளை மலர்களின் இடையே
வகை வகையான நாதத்துடன் எழுந்த, சாமம் என்ற சிறந்த
வேதமோ என்று வியக்குமாறு ஒலிக்க, சந்திரன் குளிர்ச்சியைத்
தரும், சுவாமிமலையில் வாழ்கின்றவரே
(உலகெலாம்) அதிர்ச்சி அடையும்படி பெரும் வேகமுள்ள காற்றென
வரும், நீலத் தோகையால் அழகிய மயிலில் விரும்பி ஏறும் இளையோனே
முறையாக உலகங்கள் எல்லாவற்றையும் படைத்து, அவைகளை
நிலைத்திருக்கக் காத்த உமாதேவியார் அருளிய புதல்வனே!
தேவேந்திரர்களின் பெருமானே.

(101) யமுனா கல்யாணி (6) — (1+½+½+2)

கறைபடும் உடம்பு இராது எனக்
கருதுதல் ஒழிந்து, வாயுவைக்
கரும வசனங்களால் மறித்து — அனல் ஊதி
கவலை படுகின்ற யோக கற்
பனை மருவு சிந்தை போய் விடக்
கலகமிடும் அஞ்சும் வேரறச் — செயல் மாள

குறைவு அற நிறைந்த மோன நிர்க்
குணம் அது பொருந்தி வீடு உறக்
குருமலை விளங்கு ஞான சற் — குரு நாதா
குமர சரண் என்று கூதளப்
புது மலர் சொரிந்து கோமளப்
பதயுகள புண்டரீகம் உற்று — உணர்வேனே (மு)

சிறை தளை விளங்கு பேர் முடிப்
புயலுடன் அடங்கவே பிழைத்து
இமையவர்கள் தங்கள் ஊர் புகச் — சமர் ஆடி
திமிரமிகு சிந்து வாய்விடச்
சிகரிகளும் வெந்து நீறெழத்
திகிரி கொள் அநந்த தடிகைத் — திருமாலும்

பிறை மவுலி மைந்த கோ எனப்
பிரமனை முனிந்து காவலிட்டு
ஒரு நொடியில் மண்டு சூரனைப் — பொருது ஏறி.

(101) குற்றங்களுக்கு இடமான இவ்வுடம்பு நிலைத்து நிற்காது என்று எண்ணுவதை விட்டு, (உடம்பை நெடுநாளிருக்கும் பொருட்டு) பிராண வாயுவை (ஆகருஷண ஸ்தம்பநாதி) மந்திரங்களால் தடை செய்து, (அவ்வாயுவால்) மூலாக்கினியை எழுப்பி

கவலைக்கு இடந்தருகின்ற யோக மார்க்கப் பயிற்சிகளைப் பற்றி எண்ணுகின்ற சிந்தனைகள் யாவும் தொலையவும், கலகத்தைத் தரும் ஐம்புலன்களும் ஒடுங்கி வேரற்றுப் போகவும் என் செயல்கள் யாவும் ஓய்வுற்று அழியவும்

குறைவில்லாமல் பரிபூரணமாக உள்ள மவுன நிலையை, குணங்களற்ற நிலையை அடைந்து, முத்தியை அடையவும், சுவாமி மலையில் விளங்கி வீற்றிருக்கும் ஞான சற்குரு நாதனே!

குமர சரணம் என்று கூறிக் கூதளச் செடியின் புது மலரைச் சொரிந்து (உனது) அழகிய இரண்டு திருவடித் தாமரைகளைச் சார்ந்து (சிந்தித்து) உன்னை உணர்வேனோ!

சிறையும் விலங்குமாய் கிடந்து விளங்கின பேர்களாகிய தேவர்கள், (முடிப்புயல்) மேக வாகனனாகிய இந்திரன் முதலான யாவரும் பிழைக்கவும், தேவர்கள் தங்கள் ஊராகிய பொன்னுலகில் குடிபுகவும் போரிட்டு

இருள் மிகுந்த கடல் ஓலமிட, மலைகள் வெந்து பொடியாக, சக்கரத்தை ஏந்தியவரும், (அநந்தம்) பொன் முடியைத் தரித்தவருமான திருமாலும்,

சந்திரனை முடியிற் சூடிய சிவன் மைந்தனே - சூரன் அழித்தருளுக எனத் துக்கத்துடன் முறையோ என்று முறையிட, (பிரணவப் பொருளை அறியாது விழித்த) பிரமனைக் கோபித்துச் சிறையில் வைத்து, ஒரு நொடிப் பொழுதில், நெருங்கி எதிர்த்த சூரனுடன் பொருது ஜெயித்து

பெருகு மத கும்ப லாளிதக்
கரி என ப்ரசண்ட வாரணப்
பிடிதனை மணந்த சேவகப் பெருமானே (மு)

பெருகி வரும் மதநீருள்ள மத்தகத்தையும், அழகையும் கொண்ட யானை எனப்படும் வீரம்-வலிமை கொண்ட ஐராவதம் என்னும் வெள்ளை யானையால் வளர்க்கப்பட்ட (பெண்யானையன்ன நடையைக் கொண்ட) தேவசேனையை மணந்த பராக்ரமம் வாய்ந்த பெருமானே.

---

(102) பீம்பளாஸ் (8) (–) ஆதி /400

காமியத்து அழுந்தி இளையாதே
காலர் கைப் படிந்து மடியாதே
ஓம் எழுத்தில் அன்பு மிக ஊறி
ஓவியத்தில் அந்தம் அருள்வாயே

தாமம் மெய்க்கு அணிந்த சுகலீலா
சூரனைக் கடிந்த கதிர்வேலா
ஏவ வெற்பு உயர்ந்த மயில் வீரா
ஏரகத்து அமர்ந்த பெருமானே.

(102) பயன் கருதிச் செய்யும் கிரியை பக்தி இவைகளில் மனம் அழுந்தி
(அல்) ஆசைப்படும் பொருள்களில் அழுந்தி) ஈடுபட்டு மெலியாமல்
காலதூதர்களின் கையிற் சிக்கி இறந்து போகாமல்,
ஓம் என்னும் பிரணவ மந்திரத்தில் மிகவும் அன்பைப் பெருக்கி
சித்திரம் போன்ற முடிவை (மோனநிலை ஞான உணர்வை) அடைய
அருள்வாயே
நறும்புகை திருமேனியில் படியும்படிச் செய்து திருவிளையாடல் புரிபவரே
சூரனைச் சங்கரித்த ஒளிவீசும் வேற்படையை உடையவரே
பொன்மலை போலச் சிறந்தோங்கும் மயிலில் ஏறும் வீரனே
திருவேரகம் என்னும் சுவாமிமலையில் வீற்றிருக்கும் பெருமானே.

---

(103) பிலஹரி (3½) (ட) (½+2)

குமர குருபர முருக சரவண
குக சண்முக, கரி பிறகான
குழக, சிவசுத, சிவயநம என
குரவன் அருள் குரு மணியே என்று,
அமுத இமையவர் திமிர்தம் இடு கடல்
அதென அநுதினம் உனை ஓதும்

(103) குமரனே, குருபரனே, முருகனே, சரவணனே, குகனே, ஷண்முகனே.
யானை முகத்தையுடைய கணபதிக்குப் பின் வந்த
இளையவனே (அழகனே), சிவகுமாரனே, சிவாய நம என்னும் ஐந்தெழுத்
துக்குக் குருவாகிய சிவபெருமான் அளித்த குருமணியே என்று
அமுதத்தைப் பெற விரும்பிய தேவர்கள், பேரொலியுடன் கடைந்த
கடலொலியோ என்று சொல்லும்படி நாள் தோறும் உன்னை ஓதுகின்ற

அமலை அடியவர் கொடிய வினைகொடு
அபயம் இடு குரல் அறியாயோ
திமிர எழுகடல் உலகம் முறிபட
திசைகள் பொடிபட வருசூரர்
சிகர முடி உடல் புவியில் விழ உயிர்
திறை கொடு அமர் பொரும் அயில் வீரா
நமனை உயிர் கொளும் அழலின் இணை கழல்
நதி கொள் சடையினர் குருநாதா
நளின குருமலை மருவி அமர் தரு
நவிலு மறை புகழ் பெருமானே.

மிகுந்த அடியார்கள், தமது கொடிய வினை ஒழிய வேண்டி அபய
மென்று ஓலமிடுகின்ற குரலொலியை (நீ) உணர்ந்திலையோ.
இருள் நிறைந்த ஏழு கடல்களும், உலகங்களும் அழிபடவும், திசை
கள் பொடி படவும், (போருக்கு) எழுந்து வந்த சூரர்களுடைய
மகுடம் தரித்த தலைகளும், உடல்களும் பூமியில் விழும்படி (அவர்களுடைய)
உயிரைக் கவர்ந்து கொண்டு போரைப் புரிந்த வேல் வீரனே!
நமனுடைய உயிரைக் கவர்ந்த நெருப்பு ஒத்த இணையடியையும்,
கங்கையை முடிந்த சடையினையும் கொண்ட சிவனுக்குக் குருநாதனே!
நீர்வளமிகுந்த சுவாமிமலையில் பொருந்தி எழுந்தருளியுள்ள
சொல்லப்படுகின்ற வேதங்கள் புகழ்கின்ற பெருமானே!

(104) கல்யாணி (5½) (-) 1+½+½+½

சரண கமல ஆலயத்தை அரை நிமிஷ நேர மட்டில்
தவமுறை தியானம் வைக்க அறியாத
சட கசட மூட மட்டி, பவ வினையிலே செனித்த
தமியன், மிடியால் மயக்கம் உறுவேனோ
கருணை புரியாது இருப்பது, என குறை, இவேளை செப்பு,
கயிலை மலை நாதர் பெற்ற குமரோனே
கடக புய மீதில் ரத்ன மணி அணி பொன் மாலை செச்சை
கமழும் மணம் ஆர் கடப்பம் அணிவோனே

(104) உனது தாமரையன்ன திருவடிக் கோயிலை அரைநிமிஷ அளவுக்காவது
தவநிலைத் தியானத்தில் (பொறிபுலன் அடக்கி, மனத்தை ஒருமுகப்படுத்தி,
சித்திரத் தீபம் போல் அசைவற்று இருந்து, உள்ளக்கிழியில் அவன் உரு
எழுதி உற்று நோக்கி இருக்கும் நிலை) வைக்க அறியாத
பொய்யும் குற்றமும் கொண்ட மூடன், தெளிவில்லாதவன், பிறப்பதே
தொழிலாகக் கொண்டு பிறந்துள்ள, திக்கற்றவனுமாகிய அடியன்
(அருட் செல்வமற்று) வறுமையால் மயக்கம் அடையலாமோ?
(நீ) கருணை புரியாமல் இருப்பதற்குக் காரணம் யாது குறையைக்
கண்டு? இப்பொழுது சொல்லி அருளவேண்டும், கயிலை மலை நாதராம்
சிவன் பெற்ற குமரனே!
வீர கங்கணம் அணிந்த திருப்புயத்தின் மேலே, ரத்னாபரணம், பொன்
மாலை, வெட்சி மாலை, மணம் வீசும், வாசனை (ஆர்) நிறைந்த கடப்ப
மாலை இவைகளை அணிந்தவனே!

தருணம் இது ஐயா, மிகுந்த கனம் அது உறு,நீள் சவுக்ய
சகல செல்வ யோகம் மிக்க — பெருவாழ்வு

தகைமை சிவஞானம் முத்தி பர கதியு நீ கொடுத்(து)
உதவி புரிய வேணும், நெய்த்த — வடிவேலா

அருண தள பாத பத்மம் அது, நிதமுமே துதிக்க
அரிய தமிழ் தான் அளித்த — மயில் வீரா

அதிசயம் அநேகம் உற்ற பழநிமலை மீது உதித்த
அழக திருவேரகத்தின் — முருகோனே

தக்க சமயம் இது ஐயா! மிக்க பெருமையைத் தரும் (பெருமையை உடைய) நீடித்த சுகம், எல்லா வித செல்வங்கள் (மக்கள், மனை, பொருள் அருள், சொல், செவி, கல்வி), அதிருஷ்டம் நிறைந்த பெரிய வாழ்வு.

தகுதியையும், சிவஞானம், முத்தியாம் மேலான கதியையும், நீ கொடுத்து உதவி புரிய வேண்டுகின்றேன்! நெய் பூசிய (பளபளப்புள்ள) கூர்மையான வேற்படையை உடையவனே!

சிவந்த பத்மதள (தாமரை இதழ் போன்ற) பாதத்தைத் தினந் தோறும் துதிப்பதற்கு (அடியேனுக்கு) அருமையான தமிழ் ஞானத்தைத் தந்த மயில் வீரனே

அதிசயங்கள் பல நிறைந்த பழநி மலை மீது விளங்கித் தோன்றும் அழகனே! திருவேரகத்து முருகனே!

---

(105) மாயா மாளவ கௌளை (35) (+) 4/4/4 0 கண்ட நடை (5+4)

சுத்திய நரப்புடன் எலும்பு (உ)று தசைக் குடலொடு
அப்புடன் நிணச் சளி வலிப்புடன் இரத்த குகை
சுக்கிலம் விளைப்புழுவொ(டு) அக்கையும் அழுக்கு மயிர் — சங்கு நிரை
துக்கம் விளைவித்த பிணியல், கறை முனைப் பெருகு
குட்டமொடு, விப்புருதி, புற்று எழுதல், முட்டு வலி
துச்சி பிளவைப், பொருமல், பித்தமொடு (உ)றக்கம் மிகு அங்கம் உடடே

எத்தனை நினைவையும், விளைப்பையும், மயக்கமுற
எத்தனை சலிப்பொடு களிப்பையும், மிடல் பெருமை
எத்தனை கசத்தையும் மலத்தையும் அடைத்த குடில் — பஞ்ச பூதம்

(105) சுற்றப்பட்டுள்ள நரம்புகள், எலும்புகளைப் பொருத்தும் தசைகள், குடல், நீர், கொழுப்பு, சளி, இழுப்பு நோய், இரத்தம் சேரும் இரத்தாசயம், இந்திரியம், விளைகின்ற கிருமிகள், எலும்புகள், அழுக்குகள், மயிர், சங்கு போல வெளுத்த நிரை

துன்பத்தை விளைவிக்கின்ற நோய்கள், மாசு படுமாறு விரல் நுனிகளில் வளர்ந்து வரும் தொழு நோய், கிரந்திப்புண், புற்று நோய், முட்டு வலி (தசையை) புசிக்கின்ற ராஜபிளவை, வயிற்று உப்புசம், பித்தம், தூக்கம் இவைகள் மிகுந்து வர, இந்த உடம்பினுள்ளே

எத்தனை எண்ணங்கள், செய்கைகள், மயக்கங்கள், எத்தனை வெறுப்புக்கள், எத்தனை மகிழ்ச்சி, பொலிவு, எத்தனை வலிமைப் பெருமை எத்தனை க்ஷய நோய், மலம் இவைகளை நிரப்பிய குடிசை; பஞ்ச பூதத்தாலாய குடிசை

எத்தனை குளுக்கையு மினுக்கையும் மனக்கவலை
எத்தனை கவட்டையும் நடக்கையும் உயிர்க்குழுமல்
எத்தனை பிறப்பையும் இறப்பையும் எடுத்து(உ)லகில் மங்குவேனோ

தத்தன தனத்தன தனத்தன எனத் திமிலை
நத்த, முரசத் துடி இடக்கை முழவுப் பறைகள்
சத்தம் அறையத் தொகுதி நத்த செனி ரத்த வெள்ளம் மண்டி ஓட

சக்கிரி நெளிப்ப அவுணப் பிண மிதப்ப அமரர்
கைத்தலம் விரித்து அரஹரச்சிவ பிழைத்தோமென
சக்கிர கிரிச் சுவர்கள் அக்கணமே பக்கு விட   வென்ற வேலா

சித்தம் அதில் எத்தனை செகத்தலம் விதித்து உடன் அழித்து
கமலத்தனை மணிக்குடுமி பற்றி மலர்
சித்திர கரத் தலம் (வலிப்ப) பல குட்டி நடனங்   கொள் வேனோ

செட்டி வடிவைக் கொடு தினைப்புனம் அதிற் சிறு
குறப்பெண் அமளிக்குள் மகிழ் செட்டி, குரு வெற்பில் உறை
சிற்பரமருக்கு ஒரு குருக்கள் என முத்தர் புகழ்   தம்பிரானே.

எத்தனை குலுக்கு, மினுக்கு, மனக்கவலை. எத்தனை கபடம் - வஞ்சனை, நடவடிக்கை. உயிரின் சேர்க்கை. எத்தனை பிறப்பு இறப்பு எடுத்து (நான்) உலகில் வாட்ட முற்று அழிவேனோ!

தத்தன தனத்தன தனத்தன என்று பறைகள் ஒலிக்க, முரசு, (துடி) உடுக்கை, இடக்கையால் கொட்டும் தோல் கருவிகள். முழவு முதலிய பறைகளும் பேரொலி செய்யவும், கூட்டத்தினை ஒத்து. (செனி) தோன்றிய ரத்த வெள்ளம் நிரம்பி ஓட,

பாம்பு (ஆதிசேடன்) நெளிய, அசுரர் பிணங்கள் மிதப்ப, தேவர்கள் தம் கைகளைத் தூக்கி "ஹர ஹர சிவ" பிழைத்தோம் என்று முழங்க. சக்ரவாளகிரியின் சுவர்களும் அந்த க்ஷணமே பிளவு பட வென்ற வேலா

(உனது) திருவுள்ளத்தில் நினைத்த மாத்திரத்தில், எத்தனையோ உலகங்களைப் படைத்தும், உடனே அவைகளை ஒடுக்கியும், பிரமனது அழகிய குடுமியைப் பிடித்து உனது மலர் போன்ற அழகிய திருக்கரம் வருந்த பலமுறை குட்டியும் நடனம் கொண்ட வேளே!

செட்டி வேடம் பூண்டு தினைப்புனத்தில் சிறிய குறப்பெண் வள்ளியின் படுக்கையில் மகிழ்ந்த செட்டியே! சுவாமி மலையில் வாழ்கின்ற ஞான மயச் சிவபிரானுக்கு ஒப்பற்ற குருநாதர் என்று முத்தி நிலை பெற்ற ஞானிகள் புகழ்கின்ற தம்பிரானே.

---

(106) <u>சுநாத விநோதினி</u>   (ஐ)   <u>ஆதி - தேசாதி</u>

செகமாயை உற்று என் அக வாழ்வில் வைத்த
திருமாது கெர்ப்பம்   உடல் ஊறி
தெச மாதம் முற்றி வடிவாய் நிலத்தில்
திரமாய் அளித்த   பொருளாகி

(106) உலக மாயையில் சிக்குண்டு, என் இல்லற வாழ்வில் ஏற்பட்ட அழகிய மனைவியின் கர்ப்பத்தில் உடலில் ஊறி

பத்து மாதம் நிறைய, அழகுடன் பூமியில் நன்கு தோன்றிய பொருளாகி (குழந்தை போல நீ தோன்றி)

மக அவாவின் உச்சி விழி ஆநநத்தில்
மலை நேர் புயத்தில் உறவு ஆடி
மடி மீது அடுத்து விளையாடி நித்தம்
மணி வாயின் முத்தி தரவேணும்
முக மாயம் இட்ட குற மாதினுக்கு
முலை மேல் அணைக்க வரு நீதா
முது மா மறைக்குள் ஒரு மா பொருட்குள்
மொழியே உரைத்த குருநாதா
தகையாது எனக்கு உன் அடி காண வைத்த
தனி ஏரகத்தின் முருகோனே
தரு காவிரிக்கு வட பாரிசத்தில்
சமர் வேல் எடுத்த பெருமாளே

(நான் உன்னை) குழந்தைப் பாசத்துடன் உச்சி மோந்தும், (விழி) கண்ணில் ஒத்தியும், (ஆநநத்தில்) முகத்தோடு முகம் சேர்த்தும், எனது மலையன்ன புயங்களில் நீ உறவாடியும்,

என் மடிமீது அமர்ந்து விளையாடியும், தினந்தோறும், உனது அழகிய திருவாயால் முத்தம் தந்தருள வேண்டும்

முக வசீகரம் கொண்ட வள்ளிபிராட்டியின் கொங்கையை அணைய வந்த நீதிமானே!

பழைய சிறந்த வேதத்தில், ஒப்பற்ற பெரும் பொருள்களுக்கு உள்ளே உள்ள (மொழி-பொருள்) பிரணவப் பொருளைச் சிவபிரானுக்கு விளக்கின குருநாதனே!

தடையொன்றுமின்றி, அடியேனுக்கு உன் திருவடி தரிசனத்தைத் தந்த ஒப்பற்ற திருவேரகத் தலத்து முருகோனே!

தருக்கள் (மரங்கள்) நிறைந்த, காவிரி நதியின் வட புறத்தில், போர் வேல் விளங்க நிற்கும் பெருமாளே.

---

(107) ஆனந்த பைரவி (14) (ல) /40/4/4

தெருவினில் நடவா மடவார்
திரண்டு ஒறுக்கும் வசையாலே
தினகரன் என, வேலையிலே
சிவந்து உதிக்கும் மதியாலே
பொரு சிலை வளையா இளையா
மதன் தொடுக்கும் கணையாலே
புளகித முலையாள் அலையா
மனம் சலித்தும் விடலாமோ

(107)

தெருவில் நடக்கும் மாதர்கள், ஒன்று கூடி, பழித்துக் கூறும் வசைச் சொற்களாலும்

சூரியன் என்று சொல்லும்படி, கடலினிடத்தே சிவந்த நிறத்துடன் உதிக்கின்ற சந்திரனாலும்

போருக்கு உரிய (கரும்பு) வில்லை வளைத்து, சோர்வு இல்லாமல் மன்மதன் செலுத்துகின்ற பாணங்களாலும்,

(விரகதாபத்தால்) விம்முகின்ற கொங்கையையுடைய இவள் (நாயகி) அலையுமாறு, மனம் சலித்து கலங்குமாறு விட்டு விடுதல் முறையாகுமோ!

ஒருமலை இரு கூறு எழவே உரம் புகுத்தும்	வடிவேலா	ஒப்பற்ற கிரவுஞ்ச கிரி இரண்டு கூறு படவும், (தாரகன்) மார்பு பிளக்குமாறும் செலுத்திய கூரிய வேற்படையை உடையவரே
ஒளி வளர் திரு ஏரகமே உகந்து நிற்கும்	முருகோனே	புகழ் மிகுந்தோங்கும் திருவேரகத்தில் மகிழ்ச்சியுடன் வீற்றிருக்கும் முருகோனே
அரு மறை தமிழ் நூல் அடைவே தெரிந்து உரைக்கும்	புலவோனே	அருமையான வேதப் பொருளைத் தமிழ் நூல் முறையிலே உணர்ந்து உரைத்த புலவனே! (சம்பந்தர் தேவாரம் ரிக் வேத சாரம்)
அரி அரி பிரமாதியர் கால் விலங்கு அவிழ்க்கும்	பெருமானே	இந்திரன், திருமால், பிரமன் முதலியோருடைய கால் விலங்கை அவிழ்த்து (உதவின) பெருமானே.

(108) காபி (13½) (ரு) $(1\frac{1}{2}+1)+(1+\frac{1}{2})+(\frac{1}{2}+1)+\frac{1}{2}+\frac{1}{2}+3$

நாசர் தங் கடையதனில் விரவி நான் மெத்த நொந்து	தடுமாறி	(108) கேடு செய்யும் கீழ் மக்களுடைய இடங்களில் சென்று (அவருடன்) கலந்து. (அதனால்) மிகவும் நொந்து, தடுமாற்றம் அடைந்து
ஞானமும் கெட, அடைய வழுவி, ஆழத்து அழுந்தி	மெலியாதே	(நல்ல) அறிவு கெட, முழுவதும் தவறான வழியில் விழுந்து; ஆழமாக (அத் தீ நெறியில்) அழுந்தி, மெலியாமல்,
மா சகம் தொழும் உனது புகழின் ஓர் சொற் பகர்ந்து	சுக மேவி	சிறந்த உலகம் யாவும் தொழுகின்ற, உனது புகழில் ஒரு சொல்லை யாவது (அடியேன்) கூறி சுகத்தை அடைந்து
மாமணம் கமழும் இரு கமல பாதத்தை நின்று	பணிவேனோ.	உயர்ந்த மணம் வீசும், இரண்டு தாமரை போன்ற திருவடிகளை ஒரு முகமான நிலையில் நின்று பணிய மாட்டேனோ.
வாசகம் புகல ஒரு பரமர் தாழ் மெச்சுகின்ற	குருநாதா	உபதேச மொழியை நீ கூற, சிவபெருமான் மெச்சிப் புகழ்கின்ற குருமூர்த்தியே
வாசவன் தரு திருவை ஒரு தெய்வானைக்கு இரங்கும்	மணவாளா	இந்திரன் வளர்த்த அழகிய ஒப்பற்ற தெய்வயானையின் பால் அன்பு காட்டி அருளிய மணவாளனே
கீசகம் சுரர் தருவு மகிழ மா அத்தி சந்து	புடைசூழும்	மூங்கில், தேவதாரு, மகிழ மரம், மா மரம், அத்தி மரம், சந்தன மரம் இவை பக்கங்களிற் சூழ்ந்துள்ளதும் [தேவதாரு : கற்பகம் - தென்னை

கேசவன் பரவு குருமலையில்
யோகத்து அமர்ந்த — பெருமாளே.

(109) யதுகுல காம்போதி (5½) (✓) $1+1\frac{1}{2}+1\frac{1}{2}+1\frac{1}{2}$

நா ஏறு பா மணத்த பாதாரமே நினைத்து
நால் ஆறு நாலு பற்று — வகையான
நால் ஆறும் ஆகமத்தின் நூல் ஆய ஞான முத்தி
நாள் தோறும் நான் உரைத்த — நெறியாக

நீ வேறு எனாதிருக்க. நான் வேறு எனாதிருக்க
நேராக வாழ்வதற்கு உன் — அருள் கூர

நீடு ஆர் ஷடாதாரத்தின் மீதே பராபரத்தை
நீ காண் எனா அனைச் சொல் — அருள்வாயே

சே ஏறும் ஈசர் சுற்ற மா ஞான போத புத்தி
தீராகவே உரைத்த — குருநாதா
தேரார்கள் நாடு சுட்ட சூரர்கள் மாள வெட்டு
தீரா குகா குறத்தி — மணவாளா
காவேரி நேர் வடக்கிலே வாவி பூ மணத்த
கா ஆர் சுவாமி வெற்பின் — முருகோனே

கார் போலு மேனி பெற்ற மா காளி வாலை சத்தி
காமாரி வாமி பெற்ற — பெருமாளே

திருமால் புகழ்ந்து துதி செய்ததுமான, சுவாமிமலையில்
யோக நிலையில் அமர்ந்து அருளும் பெருமானே.

(109) நாவினில் நின்று வெளிப்படுகின்ற பாடல்களின் மணம் வீசுகின்ற, பாத தாமரைகளையே எண்ணி, நாலாறும் ஒரு நாலும் (4×6=24+4=28) கூடிய (ஆகிய இருபத்தெட்டு) வகையானவையும்
(சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும்) நாலு பாதங்களை விரித்துரைப்பதாகிய, ஆகம நூல்களில் கூறப்பட்டுள்ள, ஞான முத்தி நெறியே, நாள் தோறும் நான் அநுட்டிக்கும் நெறியாகவும்

நீ வேறு நான் வேறு எனும் பிரிவு இல்லாது (ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்று பட்ட நிலையாகி) நேர்மையாக வாழ்வதற்கு உனது திருவருள் பெருகி மிக.

பரந்துள்ள ஆறு ஆதாரங்களையும் கடந்த மேற்பட்ட நிலையிலே விளங்கும் பராபரப் பொருளை நீ காண்பாயாக என்ற அந்த ஐக்கிய பதத்தை உபதேசித்து அருள்வாயே.

இடபத்தின் மீதேறும் சிவபெருமான் வலம் வந்து நிற்க, சிறந்த ஞான அறிவு உபதேசத்தை செம்மையாகவே உபதேசித்த குருநாதனே

(தங்காது) பகைவர்களாகிய தேவர்களின் பொன்னுலகை சுட்டழித்த சூரர்களை இறக்கும்படி வெட்டின தீரனே! குகனே! வள்ளி மணவாளனே

காவேரி ஆற்றின் நேர் வடக்கே, குளங்கள் நிறைந்தும், மலர்களின் நன் மணம் கமழும், குளிர்ந்த பல சோலைகள் சூழ்ந்தும் விளங்கும் சுவாமிமலை முருகனே!

கரிய மேகம் போன்ற மேனியை உடைய பெருமை வாய்ந்த காளி, பாலப்பருவத்தினள், சத்தி, காமனை எரித்த சிவனது இடது பாகத்தில் இருப்பவள் பெற்ற பெருமானே!

(110) ஹம்ஸாநந்தி (8) (~) ஆதி

நிறைமதி முகம் எனும் ஒளியாலே
நெறி விழி கணை எனும் நிகராலே
உறவு கொள் மடவர்கள் உறவு ஆமோ
உனது இரு அடியினி அருள்வாயே
மறை பயில் அரி திரு மருகோனே
மருவலர் அசுரர்கள் குல காலா
குறமகள் தனை மணம் அருள்வோனே
குருமலை மருவிய பெருமானே

(110)

பூரண சந்திரன் போன்ற முகத்தின் ஒளியாலும்
வழிகாட்டியாயுள்ள கண் அம்பு புரியும் போரினாலும்
உறவு பூண்கின்ற மாதர்களின் உறவு ஆகுமோ? (கூடாது என்றபடி)
உனது இரண்டு பாதங்களை இனித் தந்தருளுக
வேதங்களிற் புகழ்ந்து கூறப்பட்ட திருமாலின் அழகிய மருகனே!
பகைவர்களாம் அசுரர் குலத்துக்கு (குலத்தை அழித்த) காலனே
வள்ளியை மணம் புரிந்து அருளியவனே
சுவாமிமலையில் வீற்றிருக்கும் பெருமானே.

(111) காபி (3½) (~) ½+2

பாதி நதி, மதி, போதும் அணி சடை நாதர் அருளிய குமரேசா
பாகு கனி மொழி மாது குறமகள் பாதம் வருடிய மணவாளா
காதும் ஒரு விழி காகம் உற அருள் மாயன் அரி திரு மருகோனே

காவல் எனை அணுகாமல் உனது இரு காலில் வழிபட அருள்வாயே
ஆதி அயனொடு தேவர், சுரர், உலகு ஆளும் வகையுறு சிறை மீளா
ஆடு மயிலினில் ஏறி அமரர்கள் சூழ வர வரும் இளையோனே

(111)

பிறைச் சந்திரனையும், கங்கை ஆற்றையும், கொன்றை முதலிய மலர்களையும் அணிந்துள்ள சடைப் பெருமான் (சிவன்) அருளிய குமரேசனே
சர்க்கரை வெல்லத்தையும், கனியையும் போன்ற மொழிகளை உடைய மாது வள்ளியின் திருவடியைப் பிடித்து வணங்கின மணவாளனே
கொல்லுதற்குத் துணிந்தும் (அடைக்கலம் புகுந்ததனால்) ஒரு விழியை காக வடிவுற்ற காகாசுரனுக்குத் தந்து அருள் புரிந்த ஸ்ரீராமன் - மாயவன் அரி (திருமாலின்) அழகிய மருகனே!
காலன் என்னை அணுகாத வகைக்கு, உன்னுடைய இரண்டு திருவடிகளில் வழிபடும் (புத்தியை) அருள்வாயே
ஆதிப் பிரமனோடு தேவர், தேவலோகத்தை ஆளும்படி அவர்களிருந்த சிறையினின்றும் அவர்களை மீட்டு
ஆடுகின்ற மயிலில் ஏறி, அமரர்கள் சூழ்ந்து வர வந்த இளையவனே!

சூதம் மிக வளர் சோலை மருவு
சுவாமிமலை தனில் உறைவோனே
சூரன் உடல் அற வாரி சுவறிட
வேலை விட வல பெருமானே.

மாமரங்கள் அதிகமாக வளர்ந்துள்ள சோலைகள் சூழ்ந்துள்ள சுவாமிமலையில் உறைபவனே!
சூரன் உடல் பிளவு பட்டழிய, கடல் வற்றிப்போக வேலாயுதத்தை பிரயோகித்த பேராற்றலுடைய பெருமானே.

---

(112) அமிர்த வர்ஷிணி (16½) (~) 3/3/30 திஸ்ர நடை

மகர கேதனத்தன் உருவு இலான் எடுத்து
மதுர நாணி இட்டு நெறி சேர்வார்
மலையவே வளைத்த சிலையின் ஊடு ஒளித்த
வலிய சாயகக் கண் மடமாதர்
இகழ வாசமுற்ற தலையெலாம் வெளுத்து
இளமை போய் ஒளித்து விடுமாறு
இடைவிடாது எடுத்த பிறவி வேர் அறுத்து உன்
இனிய தாள் அளிப்பது ஒருநாளே
அகிலம் ஏழும் எட்டு வரையின் மீது முட்ட
அதிரவே நடத்து மயில் வீரா
அசுரர் சேனை கெட்டு முறிய, வானவர்க்கு
அடைய வாழ்வளிக்கும் இளையோனே
மிக நிலா எறித்த அமுத வேணி நிற்க
விழை சுவாமி வெற்பில் உறைவோனே
விரைய ஞான வித்தை, அருள் செய் தாதை, கற்க
வினவ, ஓது வித்த பெருமானே.

(112) மகர மீனைக் கொடியாக உடையவனும், உருவம் இல்லாதவனுமான மன்மதன் கையிலெடுத்து, இனிமை தரும் (கரும்பு) வில்லில் நாண் ஏற்றி, நல்ல நெறியில் இருப்பவர்களும்
மயங்கித் திகைக்கும்படியாக வளைத்த வில்லின் உள்ளே ஒளித்த வலிய அம்பு போன்ற (மன்மதனது அம்பு போன்ற) கண்களை உடைய அழகிய மாதர்கள்
இகழும்படியாக, (ஒரு காலத்தில்) மணம் பொருந்தியிருந்த தலை முழுவதும் வெளுத்து, இளமை என்பது போய் ஒளித்து விடும்படி
இடைவிடாமல் நான் எடுத்து வந்த பிறவிப் பிணியின் வேரை அறுத்து உன்னுடைய இனிய திருவடியைத் தருவதான ஒரு நாள் (எனக்குக் கிடைக்குமா)
உலகங்கள் ஏழின் மீதும், அஷ்ட கிரிகளின் மீதும், முட்டும்படியாகவும் அதிருமாறும் செலுத்துகின்ற மயில் வீரனே!
அசுரர்களுடைய சேனைகள் அழிந்து ஒழியச் செய்து, தேவர்கட்கு முழு வாழ்வைத் தந்த இளையோனே!
மிகவும் நிலவொளியை வீசுகின்ற, அமுதச் சடையார் நின்று கேட்க விரும்புகின்ற சுவாமிமலையில் உறைகின்றவனே!
விரைவில், ஞான மூலப் பொருளை (பிரணவப் பொருளை), அடியார்களுக்கு அருள் புரிகின்ற பிதா (சிவபிரான்) அறிய வேண்டிக் கேட்க, அதை அவருக்கு உபதேசித்த பெருமானே!

(502) கமாஸ் (12) ஆதி-திஸ்ர நடை

முருகு காள விடம் அயின்ற இருகண் வேலின் உளம் மயங்கி
முனிவு வேரி முகை அடர்ந்த முலை மீதே -
முடுகு காதல் தனை மறந்து பரம ஞான ஒளி சிறந்து
முகம் ஒரு ஆறும் மிக விரும்பி அயராதே
அறுகு தாளி, நறை அவிழ்ந்த குவளை, வாச மலர், கரந்தை
அடைய வாரி மிசை பொழிந்து உன் அடிபேணி

அவசம் ஆகி உருகு தொண்டருடன் அது ஆகி விளையும் அன்பின்
அடிமை ஆகும் முறைமை ஒன்றை அருள்வாயே

நறுகண் வீரர் தலை அரிந்து பொருத சூரன் உடல் பிளந்து
நமர வேலை சுவற வென்ற வடிவேலா
தரளமூரல் உமை மடந்தை முலையில் ஆர அமுதம் உண்டு
தரணி ஏழும் வலம் வரும் திண் மயில் வீரா
மறுவிலாத தினை விளைந்த புனம் விடாமல் இதண் இருந்து
வலிய காவல் புனை அணங்கின் மணவாளா
மருவு தாழல் அணி செருந்தி அடவி சூத வனம் நெருங்கி
வளர் சுவாமிமலை அமர்ந்த பெருமானே.

(42)

(502) கருமையாய் விரைந்தெழுந்த, கரிய விடத்தை உண்ட. [illegible]
இரண்டு கண்களாகிய வேலினால் உள்ளம் மயங்கித், [illegible]
மணமுள்ள மொட்டுப் போன்ற நெருங்கிய தனங்களின் [illegible]
முடுகின்ற காதலை மறந்து, பெரிய ஞான ஒளியானது சிறந்து [illegible]
கள் ஆறினையும் மிகவும் விரும்பிச், சோர்வு இன்றி
தாளி அறுகும், மணம் வீசும் குவளை மலரும், வாசனைமிக்க [illegible]
திருநீற்றுப் பச்சையும். இவைகளையெல்லாம் நிரம்ப வாரி [illegible])
மேலே சொரிந்து, உனது திருவடியை விரும்பி,
தன் வசம் அழிந்து உள்ளம் உருகுகின்ற தொண்டர்களு [illegible]
அதனால் விளையும் அன்பினால் அடிமை எனும் ஒழுக்க முறை [illegible]
ஒரு பேற்றை (அடைய) அருள்வாயே.
அஞ்சாமையுடைய வீரர்களின் தலைகளை அரிந்து போர் செய்த [illegible]
உடலை பிளந்து, ஒலிக்கும் கடலை வற்றும்படி செய்து வென்ற வடிவேலா
முத்துப் போன்ற பற்களை உடைய உமை மாதின் [illegible]
பால் அமுதம் உண்டு, உலகு ஏழையும் வலம் வந்த வலிய மயில் [illegible]
குற்றமில்லாத தினை விளைந்த புனத்தை நீங்காது [illegible]
பலமான காவல் காத்த வள்ளி பிராட்டியின் மணவாளனே
பொருந்திய புலிநகக் கொன்றை, அழகிய செருந்தி [illegible]
நந்தவனமும், மாமரக் காடும் நெருங்கி வளரும் சுவாமிமலை
அமர்ந்துள்ள பெருமானே.

(113) <u>திருவெழுகூற்றிருக்கை</u>

<u>தர்பாரி கானடா</u> <u>(ஒ)</u> ஒ ¾ <u>ஆதி</u>

ஓர் உருவாகிய தாரகப் பிரமத்து
ஒரு வகைத் தோற்றத்து இரு மரபு எய்தி
ஒன்றாய் ஒன்றி இருவரிற் தோன்றி மூவாதாயினை (மு)

இரு பிறப்பாளரில் ஒருவன் ஆயினை
ஓராச் செய்கையின் இருமையின் முன்னாள்
நான்முகன் குடுமி இமைப்பினிற் பெயர்த்து
மூவரும் போந்து இரு தாள் வேண்ட
ஒரு சிறை விடுத்தனை (மு)

ஒரு நொடி அதனில் இரு சிறை மயிலின்
முந்நீர் உடுத்த நானிலம் அஞ்ச நீ வலஞ் செய்தனை (மு)

நால் வகை மருப்பின் மும்மதத் திரு செவி
ஒரு கைப் பொருப்பன் மகளை வேட்டனை.

ஒரு வகை வடிவினில் இரு வகைத்தாகி
மும்மதன் தனக்கு மூத்தோனாயினை

(113) ஒரு பொருளாகிய பிரணவமாம் முழு முதலின் ஒரு வகையான தோற்றத்தில் (ஐந்து முகத்தோடு அதோமுகமும் சேர்ந்த சிவத்தின் தோற்றத்தில்) சக்தி- சிவம் எனப்படும் இரண்டின் இலக்கணமும் கொண்டு, தான் ஒரு உருவாகப் பொருந்தி, அந்தச் சிவம் சக்தி எனப் படும் இருவரிடம் தோன்றி, மூப்பு இலாது, என்றும் இளையவனாய் விளங்குகின்றவன் ஆயினை

இருபிறப்பாளர் அந்தணர் குலத்தில் ஒப்பற்றவன் ஆயினை. பிரணவத்தின் பொருளை (ஓராது) அறியாமல் (பிரமன்) விழித்த காரணத்தால், (இருமையின்) பெருமையுடன் முன்பு ஒரு நாள் பிரமனுடைய குடுமியை இமைப்பளவில் கலையச் செய்து, அரன், அரி, இந்திரன் ஆகிய மூவரும் உன்னிடம் வந்து, உனது இரண்டு திருவடிகளைப் பணிந்து முறையிட்டு வேண்ட, நீ இட்ட சிறையினின்றும் அந்தப் பிரமனை விடுவித்தாய்.

ஒரு நொடிப் போதில், (இரு) பெரிய சிறகுகளை உடைய மயில் மீது ஏறி, (முந்நீர்) கடலை ஆடையாக உடுத்துள்ள – குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் – எனப்படும் நால் வகைத்தான உலகு அஞ்ச – நீ அதை வலம் வந்தனை.

நான்கு வகைத் தந்தங்களையும், மும்மதத்தையும் இரண்டு செவிகளையும், ஒப்பற்ற துதிக்கை ஒன்றையும் கொண்ட, மலையன்ன ஐராவதத்தை உடைய இந்திரன் மகள் தேவசேனையை மணம் செய்து கொண்டனை.

ஒரு வகையான யானை வடிவிலே இருவகைத்தாகிய – மழ களிறு, முது களிறு (இளம் களிறு, வயதான களிறு) என இரண்டு வகையாகவும், வரவல்ல 'மும்மதத்துடன் வந்த மூத்தவனை விளங்கினாய்

நால்வாய் முகத்தோன் ஐந்து கைக் கடவுள்
அறுகு சூடிக்கு இளையோன் ஆயினை
ஐந்தெழுத்ததனில் நான் மறை உணர்த்து
முக்கட் சுடரினை இருவினை மருந்துக்கு
ஒரு குருவாயினை (மு)

ஒருநாள் உமை இரு முலைப்பால் அருந்தி
முத்தமிழ் விரகன் நாற்கவி ராஜன்
ஐம்புலக் கிழவன் அறுமுகன் இவன் என
எழில் தரும் அழகுடன் கழுமலத்து உதித்தனை.

அறுமீன் பயந்தனை ஐந்தரு வேந்தன்
நான்மறைத் தோற்றத்து முத்தலைச் செஞ்சூட்டு
அன்றில் அங்கிரி இரு பிளவாக
ஒரு வேல் விடுத்தனை (மு)

தொங்கும் துதிக்கை முகத்தோனும் ஐங்கரக் கடவுள் அறுகு சூடி ஆகிய கணபதிக்குத் தம்பியாய் விளங்குகின்றாய்

ஐந்தெழுத்து பஞ்சாக்ஷர மூலமாக நான்கு வேதங்களும் கடவுள் இவரே என உணர்த்தும் மூன்று சுடர்களைத் தமது கண்களாகக் கொண்டுள்ள (சுடரினை-ஐ) தலைவரும், நல்வினை தீவினை எனும் இரண்டு வினைகளை நசிக்கும் மருந்தாய் விளங்குபவருமான சிவனுக்கு ஒரு குருவாய் அமைந்தாய்

முன்பொருநாள் உமாதேவியின் பெருமைவாய்ந்த முலைப்பாலை உண்டு (இயல். இசை. நாடகம் என்னும்) முத்தமிழில் வல்லவனாய் (ஆசு. மதுரம். சித்திரம், வித்தாரம் எனப்படும்) நான்கு விதக் கவி பாடுவதிற் கவிராஜனாய், (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனப்படும்) ஐம்புலங்களுக்கும் (பஞ்சேந்திரியங்கட்கும்) உரிய உணர்ச்சிகட்கும் கிழவனாய் - பஞ்சேந்திரியங்களையும் தனது வசத்தில் உடையோனாய் - அந்த உணர்ச்சிகட்கு அடிமைப் படாதவனாய் - ஐம்புலம் வென்றோனாய், ஆறுமுகங்களை உடைய ஷண்முக மூர்த்தியே இவன் என்று யாவரும் கூறிப் புகழும்படி, (எழில்) இளமை விளங்கும் அழகுடனே சீகாழிப் பதியில் தோன்றினாய்

கார்த்திகை மாதர்களாம் ஆறு நக்ஷத்திரங்களும் பெற்ற புதல்வனாய் விளங்கினாய்; (சந்தானம், அரிசந்தானம், மந்தாரம். பாரிஜாதம் - கற்பகம் எனப்படும்) ஐவகைத் தெய்விக விருக்ஷங்கள் உள்ள பொன்னுலகுக்கு சக்ரவர்த்தியாய் விளங்கி. நாலு வகையானதாய (மறை) ரகசியமான (விளங்காததான) தோற்றத்து (பை, முட்டை, நிலம் வியர்வை) எனப்படும் தோற்றங்களுள் ஒன்றானதும், முத்தலைப்

காவிரி வட கரை மேவிய குருகிரி இருந்த
ஆறெழுத்து அந்தணர் அடியிணை போற்ற
ஏரகத்திறைவன் என இருந்தனையே. (மு)

பிரிவுகளைக் கொண்ட, செவ்விய உச்சிக்கொண்டையை உடைய துமான, (அன்றில்) கிரௌஞ்சப் பறவையின் பெயர் கொண்ட (கிரி) மலை இரண்டு பிளவாகும்படி ஒப்பற்ற ஒரு வேலாயுதத்தைப் பிரயோகித்தாய்.

காவிரியின் வட கரையில் உள்ள குருமலை எனப் பெயர் கொண்ட சுவாமிமலையில் (திருவேரகத்தில்) குடி கொண்டுள்ளவர்களும். உனது திருமந்திரமாகிய 'குமாராய நம' என்னும் ஷடாக்ஷர மந்திரம் ஓதுபவர்களுமாகிய அந்தணர்கள் உனது திருவடியிணைப் போற்ற 'ஏரகத்து இறைவன்' என்னும் திருப்பெயருடன் விளங்கி வீற்றிருக்கின்றாய்.

நீடார் ஷடாதாரம் — ஆறு ஆதார சக்கரங்கள்

	ஆதாரம்	ஆதாரத் தலம்	இடம்	நிறம்	இதழ்க் கமலம்	கடவுள்
①	மூலாதாரம்	திருவாரூர்	குய்யத்திற்கும் குதத்திற்கும் மத்தி	மாணிக்க	4	விக்னேஸ்வரன், வல்லபை
②	சுவாதிஷ்டானம்	திருவானைக்கா	மூலாதாரத்தும் நாபிக்கும் இடையே (அடி வயிறு)	செம்பொன்	6	பிரமன், சரஸ்வதி
③	மணிபூரகம்	திருவண்ணாமலை	நாபி - தொப்புளுக்கு நேர்	மரகதம்	10	திருமால், மஹாலக்ஷ்மி
④	அநாகதம்	சிதம்பரம்	ஹ்ருதயம்	அக்னி	12	ருத்திரன், தேவி.
⑤	விசுத்தி	திருக்காளத்தி	கண்ட ஸ்தானம் (அடிநாவு)	கருநிறம்	16	மகேச்வரன், மகேச்வரி
⑥	ஆஞ்ஞை	காசி	லலாட ஸ்தானம்: புருவ மத்தி	மேகநிறம்	3	சதாசிவம், மனோன்மணி

துவாதசாந்தம்	மதுரை	உச்சிக்குமேல் 12 அங்குலத்தில் உள்ள யோக ஸ்தானம்
பிரமாந்திரம்	கயிலை	உச்சித்துவாரம்